மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மதுராந்தகம்.

அ.வ.எண். 86/2020

இந்த நீதிமன்றத்து எழுத்தர் திரு.J.மோகன் என்பவரால் முறையாக பிரமாணம் செய்யப்பட்டு வாதி தரப்பு 2ஆம் சாட்சியத்தின் வாக்குமூலம் 1873ம் ஆண்டு 10 வது சட்டத்தின் வரைமுறைகளுக்குட்பட்டு 2026 ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 16ம் நாள் பதிவு செய்யப்பட்டது.

| | |
|---|---|
| பெயர். இஸ்மாயில் ஷேக் | வயது |
| த.பெ(அ) க.பெ | மதம் |
| கிராமம் | வட்டம் |

<u>வா.சா.2 முதல் விசாரணை</u>

16.04.2026

இந்த வழக்கில் நான் சாட்சி ஆவேன். நான் எனது முதல் விசாரணையை சத்திய பிராமாண வாக்குமூலமாக இன்று தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள சங்கதிகள் அனைத்தும் எனக்கு தெரியும். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான்.

<u>பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>

1. தாவாசொத்தை கடைசியாக எப்போது பார்த்தேன் என்றால் தற்போது நாங்கள் தான் அனுபவித்து வருகிறோம். தாவா சொத்தை வாங்கிய

நபர்கள் வீடு கட்டி வசித்து வருகிறார்களா என்றால் ஆமாம். அந்த நபர்கள் தங்கள் பெயரில் பட்டா மாற்றிவிட்டார்களா என்றால் மாற்றிவிட்டார்கள். வாதி என்ன பரிகாரம் கோரி வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் வாதியின் பணம் வேண்டும் என்று கேட்டுள்ளார், சரியாக என்ன பரிகாரம் என்று கேட்டுள்ளார் என்று தெரியவில்லை. வழக்கில் உள்ள விவரங்கள் நான் படித்து பார்க்கவில்லை என்றால் சரிதான். பிரதிவாதி தாக்கல் செய்த பதிலுரையை நான் படித்து பார்க்கவில்லை என்றால் சரிதான்.

2. தாவாசொத்தின் சந்தை மதிப்பு 1 செண்ட் நிலம் எவ்வளவு என்றால் 2015ம் வருடம் சுமார் ரூ.80,000 இருக்கும், தற்போது சுமார் ரூ.1,00,000 வரை இருக்கலாம் ஆனால் சரியான விவரம் தெரியாது. தாவாசொத்தின் ஜக்குபந்தி தெரியுமா என்றால் தெரியாது. தாவாசொத்து வாங்கிய நபர்களை இந்த வழக்கில் தரப்பினர்களாக சேர்க்கவில்லை, அதனால் இந்த வழக்கு அவசிய தரப்பினர் சேர்க்காத தோஷத்தால் பாதிக்கப்பட்டுள்ளது எனவே இந்த வழக்கு தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல. வாதி பிரதிவாதிக்கு கிரைய ஒப்பந்தத்தின்படி ரூ.50 லட்சம் முன்பணமாக எவ்வாறு கொடுத்தார் என்றால் ஒரே தொகையாக பணமாகதான் கொடுத்தார்.

3. 26.02.2015 தேதி கிரைய ஒப்பந்தத்தின் போது நான் உடனிருந்தேனா என்றால் இருந்தேன். மேற்படி தேதியில் ஏற்படுத்திய கிரைய ஒப்பந்தம் பற்றி எனக்கு எதுவும் தெரியாது, வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. அதனால்தான் நான் மேற்சொன்ன கிரைய ஒப்பந்தத்தில் சாட்சி கையொப்பம் செய்யவில்லை என்றால் சரியல்ல, நான் 2017ம் வருட கிரைய ஒப்பந்தத்தில் சாட்சி கையொப்பம் செய்துள்ளேன், ( மேலும் சாட்சி 2015ம் வருட ஒப்பந்தத்தில் வாதியின் அப்பா கையொப்பம் செய்துள்ளார் என்று கூறினார் ). 2017ம் வருட கிரைய ஒப்பந்தம் கால நீட்டிப்புகாகவும் மற்றும் நிலத்தின் மதிப்பை குறைத்து ஏற்படுத்திய ஆவணம்.

4. எனவே 2015ம் வருடம் கிரைய ஒப்பந்தத்திற்கும் மற்றும் 2017ம் வருட கிரைய ஒப்பந்தத்திற்கும் வேறு எந்த மாற்றமும் ஏற்படவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.2ல் உள்ள முதல் கையொப்பம் எங்கு வைத்து போட்டேன் என்றால் வாதியின் வீட்டில் வைத்து போட்டேன். வாதி 1ம் பிரதிவாதிக்கு பல தேதிகளில் ரூ.3,23,00,000/- கொடுத்தார் என்று எனது பிரமாணவாக்குமூலத்தில் கூறினேன், அதை நிரூபிப்பதற்கு ஆவணம்

எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் வாதி தாக்கல் செய்துள்ளார். மேற்சொன்ன தொகை எதுவும் வாதி 1ம் பிரதிவாதிக்கு கொடுக்கவில்லை நான் தவறாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. மாறாக பிரதிவாதிதான் வாதிக்கு ரூ.8,00,000/- கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. வாதி விற்பனை செய்வதற்காக விளம்பரம் கொடுத்தற்கு செலவு செய்த தொகையை காட்டுவதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளாரா என்றால் செய்துள்ளார். எனவே வழக்கு தள்ளுபடி செய்யபடவேண்டும் என்றால் சரியல்ல.